1983 பிப்ரவரி 4] *[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்*

உணர்வுகளுக்கு மதிப்பளித்து கர்நாடக மாநிலத்தினுடைய சட்டமன்றப் பேரவையும் கர்நாடக மாநில அரசும் மொழிச் சிறுபான்மையோருக்கு, இதற்கு முன்னாலே அங்கே தக்க பாதுகாப்பு தந்ததற்கிணங்க, தொடர்ந்து பாதுகாப்பு தர வேண்டுமென்பது மட்டுமல்லாமல், அந்த ஜனநாயக மரபு இந்தியாவில் இருக்கிற எல்லா சட்டமன்றப் பேரவைகளிலும் கடைபிடிக்கப் பட்டு வருகிறது என்பது மட்டுமல்லாமல், குறிப்பாகத் தென்னகத்தைச் சேர்ந்த மாநிலச் சட்டமன்றப் பேரவைகள் தொடர்ந்து கடைபிடித்து வருகின்ற உணர்வை இப்பொழுது இந்த அவையிலே நாம் தெரிவிப்பதன் மூலமாக அவர்களுக்குத் தெரிவிக்க முடியும். ஆகவேதான் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதிலிருந்தும், நான் சொன்ன பதிலிலிருந்தும் விளக்கங்கள் பெற்றிருப்பதன் காரணமாக, அந்த உணர்வை அவர்களுக்கு மீண்டும் எடுத்துத் தெரிவிக்கின்ற பொறுப்பை அரசு ஏற்றுக் கொள்ளும் என்பதன் காரணமாக, இதற்காக ஒத்தி வைப்பது அல்லது ஒரு கண்டனத் தீர்மானம் கொண்டு வருவது அவ்வளவு சரியாக இருக்காது. அதைக் கண்டிப்பதோ, நாமாக நடவடிக்கை எடுப்பதோ, வேறுபல வகைகளில் வைப்பதோ. ஜனநாயக மரபுகளைக் காப்பாற்றுவதற்கு ஒத்துவராது. ஆனால், தமிழிலே பிரமாணம் எடுத்துக் கொண்டார் என்பதற்காக வெளியிலே தாக்கப்பட்டார் என்றால் அது கர்நாடக அவையினுடைய உரிமையை மீறுகின்ற செயல்தான். அங்கே அதற்கான உரிமை மீறல் போன்ற நடவடிக்கைகளை அந்தச் சட்டமன்றப் பேரவையினர் முறைப்படி எடுத்துக் கொள்வார்கள் என்ற முறையிலே அவர்களுக்கு நாம் விட்டுவிடவேண்டும். ஆனாலும், தமிழக மக்களுடைய உணர்வை இந்த மாநிலச் சட்டமன்றப் பேரவையின் மூலமாகத் தெரிவிக்கிறோம் என்ற முறையில் இந்த அரசு தெரிவிக்கும் என்பதை மட்டும் எடுத்துச் சொல்லி, இதற்காக அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

4. கவன ஈர்ப்புகள்

(அ) மற்ற மாநிலங்களிலிருந்து நுகர்பொருள் வாணிபக் கழகம் அரிசி கொள்முதல் செய்வது.

திரு. இரா. தாமரைக்கனி; தலைவர் அவர்களே, "தமிழ் நாட்டிற்குத் தேவையான அரிசியை நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் நேரிடையாக மற்ற மாநிலங்களிலிருந்து கொள் முதல் செய்வதை மைய அரசு தடை செய்துள்ளதால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்" குறித்து அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே இந்தியா முழுவதும் அரிசியைத் தடங்கலின்றி (Single zone) கொண்டு போகலாம் என்பது மைய அரசின் கொள்கை. ஆனால், ஒரு மாநிலத்தில் உள்ள நுகர்பொருள் வாணிபக் கழகம் வேறு மாநில அரசிடமிருந்தோ அல்லது சிவில் சப்ளை கார்ப் பரேஷனிடமிருந்தோ அரிசி வாங்குவதை மத்திய அரசு இப்போது தடை செய்துள்ளது. இந்தத் தடையினால் நாம் உபரி மாநில அரசு நிறுவனங்களிடமிருந்து அரிசி வாங்க முடியவில்லை. தனியார் அரிசி வாங்க இதுபோன்ற தடையில்லை. அப்படி அவர்கள் கொண்டுவரும் அரிசியின் விலை அதிகமாக இருக்கும். நுகர்பொருள் வாணிபக் கழகம் வாங்கி வந்தால் பொது மக்களுக்குக் குறைந்த விலையில் அரிசி விற்கலாம்.

இதனால் வெளி மாநிலங்களில் அரிசி வாங்க அனுமதி தருமாறு மத்திய அரசை தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம். இனியும் வற்புறுத்தி வருவோம். அவர்களும் உதவுவார்கள் என்றே நாம் நம்பலாம்.

திரு இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் ஐம்பதாண்டு காலமாகக் காணாத கடும் வறட்சி நிலவுகிறது. காவிரி நீரும் மறுக்கப்படு கிறது. நமக்கு 80,000 டன் அரிசியும், ஏழைக் குழந்தைகளின் பசியைப் போக்குவதற்கான திட்டத்திற்கு 20,000 டன் அரிசியும் தேவைப்படும் என்று நாம் தெளிவாகத் தெரிவித்தும் மத்திய அரசு அதைக் கொடுப்பதற்கு மறுக்கிறது. இந்த நெருக்கடியை உத்தேசித்து, உபரியாக அரிசி இருக்கின்ற மாநிலங்களிலுள்ள நுகர்பொருள் வாணிபக் கழகங்களிடமிருந்து நமது மாநில அரசு அரிசி வாங்குவதற்குத் தடை இருப்பதால் அந்தத் தடையை நீக்க வேண்டுமென்று சர்வ கட்சித் தலைவர்கள் பிரதமர் அவர் களைச் சந்திப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா? நமது அதிருப்தியைத் தெரிக்கும் வகையில் பிரதமர் அவர்களின் வீட்டுக்கு முன்னால் உண்ணாவிரதம் இருப்பதற்கும் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன். சென்ற ஆண்டு 1981–82 ஆம் ஆண்டில் வறட்சியின் காரணமாக நாம் நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் ஆந்திராவுடன் பேசி அரிசியைக் கொள்முதல் செய்து கொண்டு வந்து கொண்டி

ருந்தோம், ஆனால், இந்த ஆண்டுதான் ஒரு மாநிலத்தில் உள்ள நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றொரு மாநிலத்தில் உள்ள சிவில் சப்ளை கார்ப்பரேஷனிடம் இருந்தோ அல்லது வேறு மாநில அரசிடமிருந்தோ அரிசி வாங்கிக்கொண்டு வரக் கூடாது என்று வைத்திருக்கிறார்கள். சிங்கிள் ஸோன் என்று இருப்பதால் வியாபாரிகள் சென்று கொள்முதல் செய்து 50 சதவீதம் லெவியைத் தந்துவிட்டு மீதத்தைக் கொண்டு வரலாம் என்றிருக்கிறது. ஆகவேதான் எவ்வளவுக்கெவ்வளவு தனிப்பட்ட அரிசி, நெல் வியாபாரிகள் அங்கே போய் வாங்கி 50 சதவீதம் லெவியைக் கொடுத்துவிட்டு மீதியைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வருவதற்குத் தாராளமாகச் செய்யலாம், அதற்கான வழி வசதிகளைச்செய்யும் என்றும்கூட ஊக்குவித்திருக்கிறோம். இருந்தாலும், நுகர் பொருள் வாணிபக் கழகங்கள் கொள்முதல் செய்தால் குறைந்த விலையில் பெற முடியும். அதன்விளைவாக, நுகர் பொருள் வாணிபக் கழகத்தோடு மற்றொரு நுகர்பொருள் வாணிபக் கழகம் வாணிபத் தொடர்பு வைத்துக்கொள்ளும் பொழுது அதில் குற்றங்குறைகள் ஏற்படாமல் இருக்கும். எனவே அதற்கு தொடர்ந்து அனுமதிக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி வருகிறோம். மத்திய உணவு அமைச்சரவர்களுக்கும் தெரிவித்திருக்கிறோம். இந்தியப் பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எழுதிய கடிதத்திலும் குறிப்பிட்டிருக்கிறார்கள். உணவு அமைச்சருக்கும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகிறோம். உண்ணாவிரதம் இருப்பதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். உண்ண வேண்டுமென்பதுதான் நம்முடைய பிரச்னை. உண்ண வேண்டுமென்பதற்காகதான் இவ்வளவு பிரச்னைகளும் வருகின்றன. நாங்கள் உண்ணாமல் இருக்கிறோம் என்று சொன்னால் அவர்களும் சரி என்று சொன்னாலும் சொல்லி விடுவார்கள். எனவே, அந்தக் கட்டத்திற்குப் போகாமல், அந்த அரிசியைப் பெற்று உண்ணுகின்ற முயற்சியில் நாம் ஈடுபடுவோமாக.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மத்திய அரசின் தடை உத்தரவை எதிர்த்து நமது தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் ஸ்டே வாங்குவதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது டிபார்ட்மெண்டல் இன்ஸ்ட்ரக்ஷன் என்ற அளவிற்குத்தான் வருகிறது. ஸ்டேச்சுடரியாக, சட்டமாக ஆக்கியிருந்தால் ஹைகோர்ட்டுக்கோ சுப்ரீம் கோர்ட்டுக்கோ போகலாம். ஆகவே, இது நடைமுறை விதியாக இருப்பதால் இந்த நடைமுறை விதிகளை மாற்றி நமக்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று சொல்கிறோம். இதை எதிர்த்து வழக்குமன்றத்திற்கோ, மற்றவைகளுக்கோ போவதால் நமக்குச் சாதகமான பலன் ஏற்படாது, ஏனென்றால் அதற்கு நீண்ட காலத்தாழ்வு ஏற்பட்டு வழங்காத சூழ்நிலைகூட ஏற்பட்டு விடக்

கூடும். ஆகவே, சுமூகமான முறையில் நியாயத்தை எடுத்து வைத்து, இருக்கின்ற நிலைமைகளையும் எடுத்து வைத்து இந்த அரிசியை உபரி மாநிலங்களிலிருந்து பெறுவதற்கான முயற்சிகளில் தமிழக அரசு தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது.

(ஆ) குடியாத்தம் திருமகள் பஞ்சாலை மூடல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கே. ஆர். சுந்தரம், கு. ரமணி, என். வரதராஜன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. கிருஷ்ணன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, ''குடியாத்தம் நகரில் உள்ள திருமகள் பஞ்சாலை 14-10-1982 முதல் மூடப்பட்டுள்ளதால் அதில் வேலை செய்யும் 600 தொழிலாளர்கள் வேலை இழந்தது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவை முன் கீழ்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

குடியாத்தம் திருமகள் மில்ஸ் லிமிடெட், சுமார் 25,000 கதிர்களுடன் (spindles) இயங்கும் ஒரு பஞ்சாலை ஆகும். இதில் சுமார் 600 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். வட ஆற்காடு மாவட்ட நூற்பாலை தொழிலாளர் சங்கம் (சி.ஐ.டி.யு.) குடியாத்தம் என்னும் தொழிற்சங்கம் ஆலையில் இயங்கி வருகிறது.

2. நிர்வாக இயக்குநர்களிடையே ஏற்பட்ட உட்பூசலைத் தொடர்ந்து இப்பிரச்சினை சென்னை உயர்நீதிமன்றத்தின் முன்பு நிலுவையில் உள்ளது. தொழிலாளர்கள் 14.10.82 முதல் லே-ஆப் செய்யப்பட்டுள்ளனர். இப்பிரச்சினையில் தொழிலாளர் துறை இணை ஆணையர் முன்பு 4.1.83 அன்று பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. தொழிலாளர்களுக்கு 14.10.82 முதல் 31.10.82 முடிய லே ஆப் நட்ட ஈடு கொடுக்கப்பட்டு விட்டதாகவும், 1981 மற்றும் 1982-ல் சுமார் 42 இலட்சம் ரூபாய்கள் நிறுவனத்திற்கு நட்டம் ஏற்பட்டுவிட்டதாகவும், நிர்வாக இயக்குநரின் தேர்தல் சம்பந்தமாக சென்னை உயர்நீதி மன்றத்திலிருந்து உத்தரவு எதிர் பார்க்கப்படுவதாகவும் நிர்வாகத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.